## 13. திருப்திப் பட வேண்டும்!

ஜிம்மி நாய்க் குட்டி மிகவும் சுட்டியானது.
எப்போதும் துறுதுறு என ஓடிக் கொண்டே, விளையாடிக் கொண்டே இருக்கும்.
ஆனால் எது கிடைத்தாலும் அதற்கு திருப்தி ஏற்படாது.
”ஆஹா! இன்னும் கொஞ்சம் இருந்தால் பரவாயில்லை!” என்று ஏங்கும்.
ஒரு முறை ஜிம்மி குளத்துக்கு அருகில் விளையாடிக் கொண்டு இருந்தது.
அப்போது ஒரு மீன்கொத்தி பிடித்த மீன் ஒன்று தவறிக் கீழே விழுந்தது.
அதை ஜிம்மி தூக்கிச் சென்றது.
மீன் சாப்பிட ஜிம்மிக்கு மிகவும் ஆசை.
மீன் கீழே விழுந்ததால் மண் ஒட்டிக் கொண்டது.
எனவே மண்ணைக் கழுவ குளத்தருகில் ஜிம்மி சென்றது.
தண்ணீருக்குள் தன் உருவம் ப்ரதிபலிப்பதைப் பார்த்தது.
அதை வேறு ஒரு நாய் என்று எண்ணியது.
”இந்த நாயை விரட்டி விட்டு, அதன் வாயில் இருக்கும் மீனையும் நானே சாப்பிடப் போகிறேன்” என்று பேராசையுடன் அந்த உருவத்தை மிரட்ட வாயைத் திறந்து கத்தியது ஜிம்மி.
ஜிம்மியின் வாயில் இருந்த மீனும் தண்ணீருக்குள் விழுந்தது.
”கிடைத்த மீனும் போனதே!” என்று ஜிம்மி வருந்தியது.
அன்று முதல் இருப்பதைக் கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தது.